1975 அக்டோபர் 30]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, ஜவுளிக் கடைக்காரர்களிடம் அவர்கள் ஏமாறுமல் இருக்க வேண்டும்.

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, கதர்த் துணி விற்பனையாகாமல் 1973-ஆம் ஆண்டில் எவ்வளவு ஸ்டாக் இருந்தது? அது சம்பந்தமாக ஏதாவது ரிபேட் கொடுத்து, தவணைப்படி செய்து விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறதா, சென்ற வருஷம்?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, இது காதி கிராப்ட் மூலமாகத்தான் எவ்வளவு என்று இருக்கிறது. அதற்குரிய பதில்தான் என்னிடத்தில் இருக்கிறது. தனியாகக் கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

விளாத்திக்குளத்தில் பனைவெல்லக் கூட்டுறவு சங்கம்.

*145 **வினா. திரு. எம். முத்தையா:** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) திருநெல்வேலி மாவட்டம், விளாத்திக்குளம் பனைமரத் தொழிலாளர் சங்கத்தின் சார்பாக 25—2—1975-ல் புதிய பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கம் அமைப்பது சம்பந்தமாக மனு ஏதேனும் வந்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன்மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) இந்த மனு தமிழ் நாடு கதர்-கிராமத் தொழில் வாரியத் தலைமை அலுவலகத்தில் பெறப்பட்டது.

(இ) சங்கத்தை பதிவு செய்வதற்கான ஏற்பாடுகளை செய்யும்படி தூத்துக்குடி பனைத்தொழில் தனி அலுவலரை, வாரியம் கேட்டுக்கொண்டுள்ளது.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, நெல்லை மாவட்டத்தில் பனை வெல்லக் கூட்டுறவுச் சங்க மையம், ஃபெடரேஷன் இப்பொழுது கலைக்கப்பட்டு விட்டது. அதனால் இம்மாதிரி அமைக்கப்பட்ட சங்கத்திற்கு நிதி உதவி

[திரு. சோ. அழகர்சாமி] [1975 அக்டோபர் 30

வேண்டுமென்றால் அந்த ஃபெடரேஷனிலிருந்து வாங்க முடியாமல் இருப்பதால் நேரடியாக இங்கிருந்து நிதி வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, அரசு அதனுடைய கொள்கைப்படி இடைக்காலத்தில், இரண்டாண்டுக் காலம் மதுவிலக்கு தளர்த்தப்பட்ட காரணத்தால் இந்த ஃபெடரேஷன் தேவையில்லை என்று கலைக்கப்பட்டது. மீண்டும் தற்பொழுது அந்தக் கூட்டுறவு சம்மேளனங்கள் தேவை என்று கருதப்படுவதால் மீண்டும் அவைகளையெல்லாம் அமைப்பது என்ற முடிவெடுத்து, சமீபத்தில், இன்னும் ஒருவார காலத்தில் அந்த சம்மேளனம் ஆரம்பிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்.]

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

அடுத்து கவன ஈர்ப்பு

திரு. கே. டி. கே. தங்கமணி: அட்ஜார்ன்மெண்ட் மோஷன்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாளைக்கு எடுத்துக் கொள்ளலாம்.

(2) கவன ஈர்ப்பு.

நெல் கொள்முதல் குறித்து அரசால் அறிவிக்கப்பட்ட புதிய கொள்கை குறித்து.

THIRU K. T. K. TANGAMANI: Sir, I wish to call the attention of the Hon. Minister for Revenue to a matter of urgent public importance, namely, the new policy for procurement of